1970 மார்ச் 26]

திரை அரங்குகளில் புகைப் பிடித்தல்

* 551 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரை அரங்குகளில் (Auditorium) 'புகைப்பிடித்தல்' தொடர்பான சட்டத்தை நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடித்தல் தொடர்பான சட்டத்தை நீக்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை,

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்பதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ? ரயிலில் பிரயாணம் செய்கிறபோது, உடன் இருக்கும் பயணிகள் ஆட்சேபணை செய்யவில்லையென்றால், புகை பிடிக்கலாம் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறதே, அதேபோல் திரைப்பட அரங்குகளிலும் அதை அமலுக்குக் கொண்டுவர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, புகை பிடிக்கின்ற காரணத்தால் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் திரைப்பட அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பலரும் புகை பிடிக்க ஆரம்பித்தால் சுகாதாரத் தூய்மையும் கெட்டுவிடும். அதை முன்னிட்டுத்தான் சுகாதாரத்திற்கும் ஏற்றவகையில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ரயிலில் பிரயாணம் செய்யும்போது, உடனிருக்கும் பயணிகளின் விருப்பு வெறுப்பை அறிந்து புகைபிடிப்பவர் புகை பிடிக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உடன் இருப்பவர்களின் விருப்பு வெறுப்பை அறிந்துகொள்வது என்பது திரைப்பட அரங்குகளில் முடியாத காரியம். ரயிலில் செல்லுவதுபோன்ற குறைவான கூட்டம் திரைப்பட அரங்குகளில் இல்லை.

மீன்பிடி துறைமுகங்கள்

* 552 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது பற்றி தூத்துக்குடியிலுள்ள தெற்குக் கடற்கரை மீனவர்கள் துறைமுகம் அமையவிருக்கும் இடம் பற்றி வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் 1968-லும் 1969-லும் மனுக்கள் அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகத்திற்கென தெரிந்தெடுக்கப்பட்ட இடம் குறித்து மறுப்பு தெரிவித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 1969-ல் ஒரு முறையீடு வரப்பெற்றது. இந்த முறையீட்டை அரசு நன்கு பரிசீலித்து, தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1963-லேயே தயாரிக்கப்பட்டதென்பதாலும், ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்தபிறகு தூத்துக்குடியில் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் மீன்பிடி துறைமுகத்தைக் கட்ட இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதென்பதாலும் இந்த மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான இடத்தை மாற்றுவது குறித்து வினா எதும் எழவில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டும்